பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 213

சனிக்கிழமை
27 ஜூன் 2026

ஆனி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057


# செம்மணிக்கு நீதிகோரி உரிமைப் பந்தப் போர்!

மக்கள் செயல் அமைப்பு அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 27

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி, 'மக்கள் செயல்' அமைப்பின் ஏற்பாட்டில் 'உரிமைப் பந்தம்' எனும் அமைதிவழிப் போராட்டம் நாளை மாலை 4 மணியளவில் செம்மணியில் அமைந்துள்ள அணையா விளக்கு நினைவுத் தூபியில் முன்னெ டுக்கப்படவுள்ளது.

»10

வடமராட்சி கட்டைக்காட்டில்

## சட்டவிரோத மீன்பிடி; 8 மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குக் கட்டைக்காட்டுப் பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட எட்டுப் பேர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை அதிகரித்துள்ள நிலையில், அதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் வெற்றிலைக்கேணி கடற்படையி

»11



உபதவிசாளர் கிஷோர் பதவி நீக்கம்

## ஆளுநருக்கு எதிராக நேற்று சாவகச்சேரியில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் ஞா.கிஷோரின் பதவியும், உறுப்புரிமையும் வடமாகாண ஆளுநரால் பறிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சாவகச்சேரியில் நேற்றுப் போராட்டமும் கடையடைப்பும் இடம்பெற்றது.

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை சபையில் விமர்சித்து

»11

## எங்கள் நிலத்திலிருந்து இராணுவமே வெளியேறு!

மயிலிட்டி மக்கள் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதமதுகாணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி மயிலிட்டி மக்களும், சிவில் அமைப்புகளும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டன. வலிகாமம் வடக்கில் ஜே/249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளை

»10



## பெருமளவு கஞ்சாவுடன் வவுனியாவில் மூவர் கைது!

வவுனியா, ஜூன் 27

வவுனியாவில் பெருமளவு கஞ்சாவைக் கடத்திய மூவரைக் கைது செய்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமைய, வவுனியா லக்சபான வீதியை அண்மித்த பகுதியில்

»11

சிறுவர்கள் துஷ்பிரயோகம்

## தேரர்கள் உட்பட நால்வருக்கு பல வருடங்கள் கடூழியச்சிறை

கொழும்பு, ஜூன் 27

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட தேரர்கள் உட்பட நான்கு குற்றவாளிகளுக்கு பல வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, துறவறத்துக்காக விகாரையில் ஒப்படைத்த சிறு

»11

முல்லைத்தீவில் சோகம்

## மீன்பிடிக்குச் சென்ற நபர் குளத்தில் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு – துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்விளான் கிராமத்தில் மீன்பிடிக்கச் சென்ற இளைஞரொருவர் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

»11



## கடந்த ஆட்சியாளர்களின் கீழ் சட்டவிரோத இராணுவக் குழு!

ஹிட்லர் போல் செயற்பட்டனர் என பிரதியமைச்சர் சுனில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 27

கடந்தகால ஆட்சியாளர்களின் கீழ் சட்டவிரோத இராணுவக் குழுக்கள் இயங்கின. ஹிட்லரின் கீழிருந்த இராணுவப் பிரிவுகளைப்போன்று அவர்கள் அதை இயக்கினார்கள் – இவ்வாறு பாதுகாப்பு பிரதியமைச்சர் சுனில் வட்டகல

»11

## ஹெரோய்னுடன் இளைஞன் கைது!

சிறுப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறுப்பிட்டி பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட

»11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி: 26.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4472
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 13 | 29 | 61 | 71
விசேட எழுத்து: D

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 26.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1539
வெற்றி இலக்கினம்: தனுஷம்
வெற்றி இலக்கங்கள்: 10 | 14 | 21 | 29

**NLB ஜய**
திகதி: 26.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0498
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 5 | 9 | 9 | 3

**மெகா பவர்**
திகதி: 26.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2578
ஆங்கில எழுத்து: U
சுப்பர் இலக்கம்: 04
வெற்றி இலக்கங்கள்: 49 | 50 | 55 | 70

**மஹஜன சம்பத**
திகதி: 26.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6230
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 2 | 7 | 6 | 1 | 9 | 6

**தன நிதானய**
திகதி: 26.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2260
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 17 | 46 | 72 | 79
விசேட எழுத்து: W

**சுப தவசக்**
திகதி: 26.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0346
வெற்றி இலக்கினம்: மகரம்
வெற்றி இலக்கங்கள்: 10 | 38 | 40

# ரின் இலக்கத்தைப் பெற காலவரையறையில்லை!

யாழ்ப்பாணம், ஜூன் 27

**வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற காலவரையறை இது வரை நிர்ணயிக்கப்படவில்லை. எனவே மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று முண்டியடிக்கத் தேவையில்லை என்று யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின், யாழ். பிராந்திய அலுவலகத்தில் அண்மைய நாள்களாக காலையில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் தினமும் காத்திருப்பது தொடர்பாக, மாவட்டச் செயலர், அலுவலகத்தின் பிராந்திய ஆணையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பில் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. அவ்வாறு கட்டணம் செலுத்துவதோ அல்லது பெற்றுக்கொள்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும். ஏற்கனவே வரி செலுத்துநர் அடையாள இலக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின், உரியவர் தனது தேசிய அடையாள அட்டையைக் காண்பித்து வரி செலுத்துநர் அடையாள இலக்கச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வரி செலுத்துநர் அடையாள இலக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காவிடின் நிகழ்நிலை (Online) முறைமை மூலமாகவோ அதாவது www.ird.gov.lk அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கான TIN சான்றிதழ் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 0212217333 எனும் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு தகவல்களை அறிய முடியும். எனவே பொதுமக்கள் எதுவித பீதியும் அடையத் தேவையில்லை - என்றார். (க-27)

**சுபிரி தன சம்பத**
திகதி: 26.06.2026
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 0938
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கம்: 6 0 6 7 0 8

**Super Ball** DLB
திகதி: 26.06.2026
தினம்: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3204
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கம்: 23 30 38 50

**சனிதா** DLB
திகதி: 26.06.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கம்: 32 60 65 80
வெற்றி வாரம்: 5365

**SASIRI** DLB
திகதி: 26.06.2026
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 1034
வெற்றி இலக்கம்: 16 38 44

**லக்ன ராசி** DLB
திகதி: 26.06.2026
தினம்: வெள்ளிக்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம்: 38 49 59 60
சீட்டிழுப்பு வாரம்: 4916

**KAPRUKA** DLB
திகதி: 26.06.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: M
சுப்பர் இலக்கம்: 16
வெற்றி இலக்கம்: 04 15 36 39
வெற்றி வாரம்: 2380

**அத கோடிபதி** DLB
திகதி: 26.06.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கம்: 28 29 56 58
வெற்றி வாரம்: 3030

## 2,847 தாதியர்களுக்கு ஒக்ரோபரில் நியமனம்

கொழும்பு, ஜூன் 27

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 2,847 தாதியர்களுக்கு நியமனங்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துடன், 2028ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 1,949 பேருக்கும், ஓகஸ்ட் மாதத்தில் 2,920 பேருக்கும் தாதியர் நியமனங்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டளவில் தாதியர் சேவைக்காக 13,600 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அந்த இலக்கில் 50% ஐ இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. தாதியர் சேவையில் இணையும் அனைவரதும் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. குறைந்தபட்ச வசதிகளுடன் இயங்கி வரும் தாதியர் பயிற்சிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

தாதியர் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்காக உயர்கல்வி அமைச்சுடன் இணைந்து தற்பொழுது திட்டமிட்டு வருகின்றோம்- என்றார். (ச-இ)




## 2 பஸ்கள் விபத்து; 40 பேர் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 27

தங்காலை - மாத்தறை பிரதான வீதியின் தலல்ல பகுதியில் நேற்று இரண்டு தனியார் பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளானதில் 40க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



## சா/ தரப் பரீட்சை மீள்பரிசீலனைக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 27

அண்மையில் வெளியான 2025 (2026) கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான மீள் பரிசீலனைக்கான விண்ணப்பங்கள் நேற்றுமுன்தினம் முதல் கோரப்பட்டுள்ளன.

குறித்த மீள்பரிசீலனைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதி வரையில் பரீட்சார்த்திகள் இணையவழியூடாக மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

பாடசாலை மற்றும் தனிப்பட்ட ஆகிய இரண்டு பரீட்சார்த்திகளுக்கும் இந்த நிபந்தனை பொருந்தும் என்று பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார். (ச-இ)


## சமிந்த விஜேசிறி வழக்கு ஜூலைக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 27

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறிக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளின் கடமையைத் தடுத்தது மற்றும் அதிகாரிகளைத் தாக்கியது ஆகிய குற்றச்சாட்டுகளில் நீதிமன்றத்தால் குற்றவாளி எனக் கண்டறியப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தொடர்பான தீர்ப்பு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பதுளை நீதிமன்றம் இந்த வழக்கின் தீர்ப்பை ஜூலை 28ஆம் திகதி அறிவிப்பதாக ஒத்திவைத்துள்ளது. (ச-இ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டொலர் மோசடி விவகாரம் இறுதி அறிக்கை விரைவில்

## கோப் குழு தெரிவிப்பு!

**கொழும்பு, ஜூன் 27**

**அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றுக்கு திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில், நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி சமர்ப்பித்த அறிக்கைகளை ஆராய்ந்து, நாடாளுமன்றத்தில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நடைபெற்றது.

கடந்த மாதம் 8ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு இந்த மோசடி தொடர்பாக அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையை முழுமையாக ஆய்வுசெய்த இலங்கை மத்திய வங்கி, தனது மேலதிக அவதானிப்புகள் மற்றும் கருத்துகளை உள்ளடக்கித் தயாரித்த புதிய அறிக்கையை தற்பொழுது இந்தக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கை குறித்து குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கியின் இரு அறிக்கைகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்த பின்னர், குழுவின் இறுதி அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார். (ச-இ)

## அம்பாறை மருத்துவர் கொலை; சந்தேகநபர்களுக்குத் தடுப்புக்காவல்!


கொழும்பு, ஜூன் 27

அம்பாறை மருத்துவமனையில் பணிபுரிந்த இயன் சிகிச்சை நிபுணரின் கொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களை 48 மணிநேரம் தடுத்துவைத்து விசாரிக்க நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பிரதான சந்தேகநபர், அவரது மனைவி ஆகியோர் வெள்ளவத்தையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது, வலான ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளால் யாழ்ப்பாணம் கைதடிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதன்பின்னர் நுவரெலியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கொலை செய்யப்பட்ட பெண், கண்டி, தெல்தெனிய பகுதியில் காரொன்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)



## ரகித, சரித், அருண விளக்கமறியலில்!

கொழும்பு, ஜூன் 27

பாதாள உலக சந்தேகநபரான ஹரக் கட்டா எனும் நதுன் சிந்தக கொலை செய்யப்படுவதில் இருந்து பாதுகாக்க இலஞ்சம்கோரி, அதில் முற்பணமாக 1200 இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரணை தொகுதி அமைப்பாளரான சரித் அபேசிங்க, முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸவின் மகன் சட்டத்தரணி ரகித ராஜபக்ச, விமானநிலைய மற்றும் விமானசேவைகள் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அருண ஸ்ரீ சத்துரங்க ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னெடுத்த விசாரணையின் அடிப்படையில் அவர்கள் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டனர். அவர்களை கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் முற்படுத்தியபோதே எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ச-இ)

## தரம் 1க்கு உள்ளீர்ப்பு சுற்றறிக்கை வெளியீடு!

கொழும்பு, ஜூன் 27

2027ஆம் ஆண்டில் பாடசாலைகளின் முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான சுற்றறிக்கையை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. இதற்கமைய, இந்த மாணவர் சேர்க்கைச் செயல்முறை தொடர்பான 2025/2026 இலக்கச் சுற்றறிக்கையை கல்வி அமைச்சின் அதிகாரபூர்வ இணையத்தளமான http://www.moe.gov.lk/ என்ற முகவரிக்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## அம்பாறை மருத்துவர் கொலை; பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

கொழும்பு, ஜூன் 27

குண்டசாலை பொலிஸ் பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி, விசேட பொலிஸ் குழுவொன்றால் கைதுசெய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக நுவரெலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். கடந்த 16ஆம் திகதி நுவரெலியாவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து அம்பாறை மருத்துவமனை பிசியோதெரபிஸ்ட் பெண் மருத்துவர் ஒருவரைப் படுகொலை செய்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த பிரதான சந்தேகநபரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களுக்கு அமைய, இந்தப் பொலிஸ் அதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)




## பதிலைச் சொல்லுங்கோ!

‘கேளுங்கள் தரப்படும்’ எண்டு ஆண்டவர் மட்டும் சொல்லேலை, இலங்கை அரசாங்கமும் சொல்லியிருக்குது. தகவல் அறியும் உரிமைச் சட்டமெல்லாம் அதுக்குத்தான் இருக்குது. ஆனால் சில விசயங்களை சனங்கள் கேட்டாலும், அதைப் பற்றி பதில் சொல்லாமல் இருக்கிற போக்கையும் இஞ்ச கன இடங்களில காணவேண்டிக் கிடக்கு. தேவையில்லாத ஆணியளைப் பிடுங்கிக்கொண்டிருக்கிற வடக்குக்கு பொறுப்பான பதவியில இருக்கிறவர் வந்த புதுசில ‘வடக்கில இருக்கிற சட்டவிரோதக் கட்டடங்களை எல்லாம் இடிப்பன்’ எண்டு வீராப்புக் கதைச்சவர். ஆனால் ஒரு செங்கல்லைக்கூட இடிக்காமல் தனக்குத் தேவையே இல்லாத வேலையளைப் பார்த்து வில்லங்கத்தை விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறார். அவர்தான் அப்பிடியெண்டால், இதே வடக்கில இருக்கிற சில சபையளும் செய்யவேண்டிய வேலையளை விட்டிட்டு வேற பிராக்கில இருக்கினம்.

யாழ்ப்பாணம் முனிசிபல் ஏரியாவுக்குள்ள வாற பாசையூர், புங்கன்குள றோட்டை முட்டிக்கொண்டு ஒரு கட்டடம் கட்டிக்கொண்டிருக்கினம். பாத்தவுடனே உதுக்கெல்லாம் முறைப்படி அனுமதி எடுக்காமல் தான் கட்டுகினம் எண்டு கண்டுபிடிச்சிடலாம். ஒரு கட்டடம் கட்டிறதுக்கு கனக்க ரூல்ஸ் இருக்கு. கனக்க ஆவணங்களும் குடுக்கோனும். ஆனால் உந்தக் கட்டடத்துக்கு அப்பிடியான ரூல்ஸ் ஒண்டையும் பாத்த மாதிரி தெரியேலை. சிலவேளை முனிசிபலுக்குத் தெரியாமல் கட்டுப்படுகுதோ? எண்டு நினைச்ச சிலர், இதைப் பற்றி ஒரு கடிதம் எழுதி முனிசிபலுக்குப் போட்டிருக்கினம். ‘இந்தக் கட்டடம் உங்கட அனுமதி பெற்றுத்தான் கட்டுப்படுகுதோ? அப்பிடி அனுமதி குடுத்திருந்தால் என்ன அடிப்படையில குடுத்தனியள் எண்டு சொல்ல முடியுமோ?’ எண்டு கேட்டு போன மாதம் 25ஆம் திகதி அனுப்பின கடிதத்துக்கு இண்டுவரைக்கும் முனிசிபல் பதிலே சொல்லேலையாம். ஆனால், எப்ப கடிதம் அனுப்புப்பட்டுதோ அதுக்கு அடுத்த நாளில இருந்து அந்தக் கட்டட வேலையில ஒரு மாற்றம். அவ்வளவு நாளும் ஆமைவேகத்தில நடந்த கட்டட வேலையள் எல்லாம், அதுக்குப் பிறகு முயல் வேகம் பிடிச்சு இப்ப முடிக்கிற நிலைமையே வந்திட்டாம். அப்ப ‘முனிசிபலுக்கு இப்பிடியொரு கடிதம் வந்திருக்கு அதுக்குள்ள கட்டி முடியுங்கோ’ எண்டு உள்ளுக்க இருந்தே ஆரோ ஒரு கறுப்பாடு கட்டடம் கட்டுறவைக்கு தகவலைக் குடுத்திட்டுதோ எண்டு அக்கம் பக்கத்தில இருக்கிறவைக்கு டவுட் வந்திட்டுது.

அதைவிட இப்பிடியொரு கட்டடம் கட்டுப்படுறதைப் பற்றி தகவல் கிடைச்சதும் முனிசிபல்காரர் அதைப் போய்பார்த்து என்ன ஏதெண்டு விசாரிச்சிருக்க வேணுமெல்லோ. ஆனால் அவை அதுவும் செய்யேலையாம். அப்ப உள்ளுக்கால ஏதும் டீலிங் நடந்ததாலை தான் முனிசிபல்காரர் இப்பிடியொரு பெட்டிசம் போயும் கண்டும் காணாமல் இருக்கினமோ எண்டும் அந்த ஏரியாச் சனங்கள் கேக்கினம். என்னதான் கேட்டாலும் நாங்கள் வாயை மூடிக்கொண்டு ‘கம்மெண்டு’ தான் இருப்பம் எண்டு முனிசிபல்காரர் இந்த விசயத்தில இன்னும் மௌனவிரதமாத்தான் இருக்கினமாம். உரியவை கொஞ்சம் இந்த விசயத்தைக் கருத்தில எடுத்து, அது சட்டவிரோதக் கட்டடமா? இல்லையா? எண்டு தீர விசாரிச்சு, பதிலைச் சொல்லுவினமோ?

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சா/ தரப் பெறுபேறு அவசியமில்லை; உயர்தரத் தொழிற்பாடம் கற்கலாம்!

**கொழும்பு, ஜூன் 27**

**2026/2027ஆம் கல்வியாண்டுக்கான தரம்-12 உயர்தர தொழிற்பாடத்துறைக்கு புதிய மாணவர்களைச் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பாடத்துறையில் மாணவர்களை அனுமதிக்கும்போது க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறுகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.**

அவ்வாறு உயர்தரத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு தரம் 12/13 இல் பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் அதே வேளை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அங்கீகாரத்துடனான தொழிற்தகைமைகளை (NVQ Level 4) பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படும்.

2025(2026)ஆம் ஆண்டில் அல்லது கடந்த 3 வருடங்களுக்குள் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய எவரேனும் ஒரு மாணவர், தொழிற்பாடத்துறையைக் கொண்டுள்ள பாடசாலையொன்றின் தரம் 12 க்கு விண்ணப்பிக்கமுடியும். தரம் 13 இல் அம் மாணவர்கள் பொருத்தமான தொழிற்றுறையொன்றின் என்.வி.கியூ. 4 ஆம் மட்டப் பயிற்சிக்காக அரசாங்க தொழிற்பயிற்சி நிறுவனமொன்றுடன் பாடசாலையினாலேயே இணைக்கப்படுவர்.

இதன்போது, மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சிநிறுவனமொன்றில் மட்டுமன்றி, தொழில்புரியும் இடத்திலுமான பயிற்சிக்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் https://www.doenets.lk/ எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளமுடியும்.

அதற்கமைய, தாங்கள் அனுமதி பெற எதிர்பார்க்கும் பாடசாலையின் அதிபருக்கு 2026 ஜூலை 8ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தை அனுப்பிவைத்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# எரிபொருள் மானியத்தை நிறுத்தும் தீர்மானமில்லை

### வலுசக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் எரிபொருள் மானியம் வழங்குவதை இடைநிறுத்துவதற்கு எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்று வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின் போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய கிழக்கில் நிலவும் மோதல் சூழ்நிலை இன்னும் முழுமையாக முடிவுக்கு வரவில்லை. இதனால் உலகளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு, உலக சந்தையில் எரிபொருளின் விலை திடீரென அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே தேசியமட்டத்திலும் விலைத் தளம்பல் ஏற்பட்டது.

எரிபொருள் விலையை அதிகரிக்கும் போது, அதன் முழுச் சுமையையும் நாங்கள் நுகர்வோர் மீது சுமத்தவில்லை. மக்களுக்குத் தொடர்ந்து எரிபொருள் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

எரிபொருள் மானியங்களை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் 57 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலைவரப்படி, ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாவும், ஒக்ரேன் 92 ரக பெற்றோலுக்கு 20 ரூபாவும் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த மானியம் வழங்குவதை நிறுத்துவதற்கு அரசாங்கம் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. இதற்காக ஒதுக்கப்பட்ட 57 பில்லியன் ரூபா தொகை இன்னும் முழுமையாகச் செலவழிக்கப்படவில்லை. அதேவேளை தற்போதைய சூழலில் எரிபொருள் விலையைக் குறைப்பது குறித்தும் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. உலக சந்தையில் விலை ஸ்திரமடைந்ததும், நுகர்வோருக்கு அதன் சாதகமான பலன்கள் பெற்றுக்கொடுக்கப்படும்- என்றார். (ச-இ)

# பருத்தித்துறை சாலை போக்குவரத்து; பிரதேசபை அமர்வில் கடும் விவாதம்

யாழ்ப்பாணம்,ஜூன் 27

பருத்தித்துறை சாலையின் போக்குவரத்து தொடர்பான விவாதத்தால், பிரதேசசபை அமர்வில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான பேருந்துகள் காலை மற்றும் மாலை மக்கள் குடியிருப்புகள் ஊடாக சேவையில் ஈடுபடுகின்றன. மருதங்கேணியிலிருந்து வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஊடாகவும், கேவிலிலிருந்து ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன் ஊடக மருதங்கேணியை வந்தடைந்து பருத்தித்துறை கேவில் வரையும், கேவிலிருந்து பருத்தித்துறை வரையும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்றன. ஏற்கனவே பருத்தித்துறை கேவில், யாழ்ப்பாணம் கேவில் போக்குவரத்துச் சேவைகள் கடற்கரை வீதியால் இடம்பெற்றுவருகின்றன. இந்த நிலையில் குடியிருப்பு வீதி ஊடான போக்குவரத்து பொருத்தமற்றது என்பதால், குறித்த வழித்தடத்துக்கு சபையால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் சபைக்குச் சொந்தமான குடியிருப்பு வீதியால் பேருந்துச் சேவை இடம்பெற அனுமதிக்கவேண்டும் என்று பருத்தித்துறை பிரதேசசபை அமர்வில் உறுப்பினர் கணைச்செல்வன் பிரேரணை முன்வைத்தார். இதனால் உறுப்பினர்களுக்கிடையே கடும் விவாதம் இடம்பெற்றது. உறுப்பினர்கள் மூவர் சபையிலிருந்தும் வெளியேறினார். (க)

# ஆமையை இறைச்சியாக்கி கடத்தியவர் சிக்கினார்



யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் பகுதியில் ஆமைகளைச் சட்டவிரோதமான முறையில் இறைச்சியாக்கி கடத்த முயன்ற நபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அச்சுவேலி, புத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

மண்கும்பான் பகுதியில் ஆமைகளை இரகசியமான முறையில் கடத்திச் செல்வதாகக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைதானார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரையும், சான்றுப்பொருள்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இலங்கையில் கடல் ஆமைகளைப் பிடித்தல், வதைத்தல், கொல்வது மற்றும் அவற்றின் இறைச்சியை வைத்திருப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் காலையில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள். பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**கும்பம்:** உற்சாகமான நாள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு அலுவலகப் பணியின் காரணமாக வெளியூர் செல்லவேண்டிவரும்.

**மீனம்:** பிற்பகலுக்குமேல் தொடங்கும் காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# தொடரும் புறக்கணிப்பு..!

யாழ்ப்பாணம் – மண்டைதீவில் அமைக்கப்பட்டுவந்த சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானக் கட்டுமானத் தைக் கைவிடத் தீர்மானித்துள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழு அறிவித்திருக்கின்றது. கிரிக்கெட் சபைக்குள் தற்போது நிலவும் கடு மையான நிதிச் சுமைக்கு மத்தியில், சர்வதேசத் தரத்தில் புதியதொரு மைதானம் அமைப்பதற்குச் சாத்தியம் இல்லை என்பதாலேயே இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் அந்தச் சபை அறிவித்திருக்கின்றது. இந்தத் திட்டத்துக்கு மாற்றாக, யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே உள்ள மைதானமொன்றில் கூடுதல் வசதியைச் சேர்ப்பதே இலங்கைக் கிரிக்கெட் சபையின் திருத்தப்பட்ட முன்மொழிவாக அமைந்திருக்கின்றது.

கால்பந்திலும், தடகளத்திலும், உள்ளக விளையாட்டுகளிலும் வடமாகாணத்துக்கு தேசிய ரீதியில் அவ்வப்போது போதியளவு அங்கீகாரங்கள் கிடைக்கின்றன. இந்தத் துறைகளில் தேசிய ரீதியிலான பிரதிநிதித்துவமும் இல்லாமலில்லை. ஆனால், கிரிக்கெட் என்பது எமது மண்ணுக் கும் மக்களுக்கும் தொடர்ச்சியாக விதி விலக்காகவே அமைந்துள்ளது. கிரிக்கெட்டில் சமீப நாள்களில் வடமாகாணம் பெரும் அணியை வீழ்த்தியதாகவோ அல்லது அந்தஸ்துபெற்ற கிண்ணத்தைக் கைப்பற்றியதாகவோ நினைவிலில்லை. இத்தகைய பின்னடைவுக்கு பல காரணங்களை அடுக்கக்கூடியதாக இருந்தாலும், போதிய வளம் இல்லை என்பதே அனைத்திலும் பிரதானமான விடயம்.

கிரிக்கெட்டுக்கென சர்வதேச மைதானமொன்று யாழ்ப்பாணத்தில் இல்லை. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் அமைந்துள்ள மைதானமொன்றே ஓரளவு வசதியுடன் உள்ளது. அந்த ஒரு ஆடுகளம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒட்டுமொத்த வீரர்கள், வீராங்கனைகளில் தேவையை நிவர்த்தி செய்கின்றதா? என்று கேட்டால், யானைப் பசிக்கு சோளப்பொரி கொடுத்த கதைதான். இந்த நீண்டகாலத் தவிப்புக்கான ஒரு நிரந்தர முற்றுப் புள்ளியாகவே, மண்டைதீவில் அமைக்கத் திட்டமிட்ட சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை எமது மக்களும், வீர, வீராங்கனைகளும் எதிர்பார்த்தனர். ஆனால், எமது காத்திருப்பு மேலும் பலகாலம் நீடிக்கப்போகின்றது என்ற செய்தியையே இடியாக இறக்கியிருக்கின்றது இலங்கைக் கிரிக்கெட் சபை.

இலங்கையில் இடம்பெறும் உள்ளூர்க் கிரிக்கெட் தொடர்களில், சில இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால், தேசிய அணி என்று வரும்போது அவர்களுக்கான இடம் திட்டவட்டமாக எந்தப் பரிசீலனையும் இல்லாமல் மறுக்கப்படுகின்றது. தமிழ், முஸ்லிம் வீரர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றனர். வடக்கு – கிழக்கில் உள்ள வீரர்களுக்கு போதியளவு கடினப்பந்து கிரிக்கெட் அனுபவம் இல்லை என்பதுதான் இந்த படுமோசமான புறக்கணிப்புக்கு சொல்லப்படும் காரணம். அந்தக் காரணத்தில் உண்மை இல்லாமலில்லை. ஆனால், அத்தகைய அனுபவத்தை வடமாகாண வீரர்களும், வீராங்கனைகளும் ஏற்படுத்திக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையையும் இலங்கைக் கிரிக்கெட் சபையால் எடுக்கப்படவில்லை என்பதே கசப் பான உண்மை.கடந்த 15 வருடங்களாக, தேசிய மைதானம், கடினப்பந்து ஆடுகளம், பயிற்சிக்கூடங்கள் என வெற்று வார்த்தைகளால்தான் கொழும்பு அரசாங்கங்கள் எமது வீரர்களை மாறிமாறி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. இதன் தொடர்ச்சியே மண்டைதீவில் அமைக்கத் திட்டமிட்ட யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானம் கைவிடப்பட்ட கதையும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







## பொய்யாமொழி

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து**

**பொருள்:** (தீங்கு செய்தவரைப்) பொறுக்காமல் வருத்தினவரை உலகத்தார் ஒரு பொருளாக மதியார்; ஆனால் பொறுத்தவரைப் பொன்போல் மனத்துள் வைத்து மதிப்பர்.




# மாகாணசபைத் தேர்தல் பலம் காட்டும் கேடயமல்ல



## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 27**
**மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டதன் உண்மையான நோக்கமான அதிகாரப் பகிர்வுக்காக அன்றி, தங்களின் அரசியல் பலத்தை நிரூபிப்பதற்காகவே எதிர்க்கட்சிகள் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு கோரி வருவதாக இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில்
நாட்டில் தற்போது மாகாணசபைத் தேர்தல்கள் என்பது முற்றிலும் இல்லாது போய், அற்றுப்போன நிலையை அடைந்துள்ளது. தற்போதைய சூழலில் இந்தத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் எவருக்கும் புலப்படவில்லை. தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் அரசியல் தரப்பினர் கூட, தங்களின் சொந்த அரசியல் இருப்புக்காகவும், மக்கள் மத்தியில் தங்களின் தற்போதைய பலத்தைக் காட்டுவதற்காகவுமே கோரி வருகின்றனர். எனவே, இத்தேர்தல் நடத்தப்பட்டாலும் கூட, அது மாகாணசபை என்ற உண்மையான கோட்பாட்டுக்கோ அல்லது அதிகாரப்பகிர்வு என்ற நோக்கத்துக்கோ எவ்வித பயனையும் அளிக்கப் போவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-இ)

# தங்க விலையில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 27
இலங்கையில் நேற்றுத் தங்கத்தின் விலை கணிசமாக அதிகரித்திருந்தது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
கடந்த சில தினங்களாக நிலவிய விலைகளுடன் ஒப்பிடுகையில் நேற்று தங்கத்தின் விலை உயர்ந்துள்ளது. 24 கரட் தங்கம் ஒரு பவுண் 3,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 379,000 ரூபாவாக நேற்று விற்பனை செய்யப்பட்டது. அதேபோல், 22 கரட் தங்கம் ஒருபவுண் 2,700 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 348, 700 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

# மாட்டினார் 'மாட்டியா'

கொழும்பு, ஜூன் 27
விளக்கமறியலில் உள்ள பாதாள உலகக்குழு உறுப்பினர் 'கெஹெல் பத்தர பத்மே'யின் துப்பாக்கிதாரியான "மாட்டியா" எனப்படும் சுரங்க சஞ்சீவ கருணாரத்ன கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார். மலேசியாவில் மறைந்திருந்த இவரை அந்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்து இலங்கைக்கு நாடு கடத்திய போதே, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் இவரைக் கைது செய்தனர்.
சர்வதேச சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டிருந்த இவருக்கு எதிராக, கடந்த 2022ஆம் ஆண்டு கம்பஹா நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்து 'பஸ்பொட்டா' உள்ளிட்ட இருவரைச் சுட்டுக் கொலை செய்தமை மற்றும் பலரைக் காயப்படுத்தியமை உள்ளிட்ட பிரதான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை கொழும்பு வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)



# எதிர்வரும் முதலாம் திகதி பேருந்துக் கட்டண உயர்வு

கொழும்பு, ஜூன் 27
தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்தக் கட்டணத் திருத்தத்திற்கு அமைய, எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப் படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கான முன்னேற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரும் பொறியியலாளருமான பி.ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார். எனினும், ஜூலை மாதத்துக்கான எரிபொருள் விலை மாற்றத்தை முழுமையாகக் கருத்திற்கொண்ட பின்னரே, பேருந்துக் கட்டண உயர்வின் இறுதிச் சதவீதம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை-ஆனி 14
28.06.2026
சுபநேரம் : 08.55 – 10.25
ராகுகாலம் : 04.25 – 05.55


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஓம் விஸ்வப் பிரமனே நமஹ

# 16 ஆம் ஆண்டு நினைவுதினம்



## திருமதி சுமங்கலி (பொன்ரதம்) விவேகானந்தன்

**திதி: 27.06.2026**

பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்டாலும் எங்காளல் மறக்க முடியவில்லை, ஒவ்வொரு செயலும் உங்களை நினைப்பூட்டுகின்றன.

உங்கள் பிரிவால் வாடும்
**கணவர் - விவேகானந்தன்,**
**சகோதர, சகோதரிகள், மருமக்கள்,**
**பெறாமக்கள், சித்தி,**
**மைத்துனர்கள்.**

(cs.61761(N-1)

## சர்வதேச தந்தையர் தினத்தில் ஏழாலையில் குருதித்தானம்



சர்வதேச தந்தையர் தினத்தை முன்னிட்டு, ஜொனியன்ஸ் சனசமூக நிலையமும், ஜொனியன்ஸ்விளையாட்டுக்கழகமும் இணைந்து ஏற்பாடுசெய்த மாபெரும் குருதிக்கொடை முகாம் ஏழாலை தெற்கில் அமைந்துள்ள தனியார் வர்த்தக நிலையக் கட்டடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் 40 பேர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். குருதிக்கொடை வழங்கியவர் களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாவர். தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவினர் நேரடியாகக் கலந்துகொண்டு குருதிச்சேகரிப்பில் ஈடுபட்டனர். குருதிக்கொடை வழங்கிய அனைவருக்கும் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. ஜொனியன்ஸ் சனசமூக நிலையமும், ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் இணைந்து சர்வதேச தந்தையர் தினத்தை முன்னிட்டு இம்முறை இரண்டாவது தடவையாக இந்த குருதிக் கொடை முகாமை நடத்தியுள்ளன. (க-66)

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மான நிறுவனத்திற்கு
பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. **உதவியாளர்** (சாரதி அனுமதிப்பத்திரம் கட்டாயம்)
2. **மேற்பார்வையாளர்**
3. **மேசன், கூலியாட்கள்**

**077 202 0634**

(CS61763 (N-1)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 30 . 05 . 1948 | 25 . 06 . 2026 |

## தனலெட்சுமி இலட்சுமணன்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த தனலெட்சுமி இலட்சுமணன் அவர்கள் கடந்த 25.06.2026 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் முருகேசு இலட்சுமணன் (குமாரவேல் கம்பனி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், சந்திரிகா (கொழும்பு), பிரேமலதா (கனடா), பிரபாகரன் (இயக்குனர் - ராசா டீசல் - யாழ்ப்பாணம்), கிருபாகரன் (வசந்தம் FM நிலையப் பொறுப்பதிகாரி), கருணாகரன் (குமாரவேல் கம்பனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவிபிரபாகரன், மதனராசா (மோகன்), சுஷானா, லோகப்பிரபா, பபிதா ஆகியோரின் மாமியாரும், அஸ்வினி - யாதுஷன், பிரவீன், அபினகா, அபிஷயன், அபினாத், அனிஷன், கவிஷன், அக்ஷயா, ருபந்தி, திலோஷன், அபினவ் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், மேத்னாவின் பூட்டியும், காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் புவனேஸ்வரி, விசாலாட்சி, காலஞ்சென்ற இராசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற நற்குணசிங்கம் மற்றும் கந்தசாமி, தங்கராசா, காலஞ்சென்றவர்களான நவரத்தினம், பொன்னுத்துரை, பத்மநாதன், முத்துலிங்கம் மற்றும் புஷ்பராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.06.2026) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையின் லோட்டஸ் மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்பு:**

**மகன்மார்:**
**பிரபாகரன் - 077 253 0865**
**கிருபாகரன் - 071 427 1057**
**கருணாகரன் - 077 537 3201**

**தகவல்:**
**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**கணவர் மற்றும் பிள்ளைகள்.**

(cs61756) (N-1)

இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும்
வலி - வடக்கு காணிகளை மீட்பதற்கான

## கவனயீர்ப்புப் போராட்டம்

இலங்கை அரசே மக்கள் காணிகளை
மக்களிடம் ஒப்படை
பொய்யான வாக்குறுதிகளை இனியும்
மக்களிடம் விதைக்காதே.
36 ஆண்டு காலத்து வலியிது...
மக்களே அணிதிரள்வீர் !
வலி - வடக்கு மக்கள் தமது சொந்த மண்ணில்
வாழ்வதற்கு ஒருமித்துக் குரல் கொடுப்பீர் !
ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம்: பலாலிச் சந்தி
ஆர்ப்பாட்டக் காலம் : 28.06.2026 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.30 - மதியம் 12.00 மணிவரை
(மதியபோசன ஒழுங்குகள் உண்டு)
ஒழுங்கமைப்பு : பலாலி உதயகலைவாணி மக்கள் ஒன்றியம்

(CS/2026/0010198)

## சென். ஜோண்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

### தரம் 12 (A/L 2028) இற்கான மாணவர் அனுமதி

(அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 30.06.2026 முதல் 10.07.2026 வரை பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாட்களில் மு.ப.8.30 மணிமுதல் பி.ப.2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

(இ) எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள் 10.07.2026

- விஞ்ஞானம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்)
- கணிதம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்)
- வர்த்தகம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்)
- கலை (தமிழ் மொழிமூலம்)
- தொழினுட்பவியல் (தமிழ் மொழிமூலம் - சென். ஜோண்ஸ் கல்லூரியில் மட்டும் )

மேற்படி விடயங்கள் தொடர்பாக அந்தந்தக் கல்லூரி அலுவலகங்களுடன் நேரடியாக அல்லது தொலைபேசியூடாக அல்லது மின்னஞ்சல் மூலமாகத் தொடர்புகொள்ள முடியும்.

**சென். ஜோண்ஸ் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி : 021 222 2432
மின்னஞ்சல் : sjcjaffna@gmail.com

**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி : 021 222 2338
மின்னஞ்சல் : forwardcgc@yahoo.com

➤ சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ள மாணவர்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் அந்தந்தப் பாடசாலைகளினால் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

**அதிபர்கள்**

(cs.47744) N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வீடு வாடகைக்கு**


கொழும்புத்துறை பிரதான வீதியில் 3படுக்கை அறை, இரண்டு குளியல் அறை, சமையல் அறை இரண்டு, HAll உடன் கூடிய புதிய வீட்டின் கீழ் மாடி வாடகைக்குண்டு.

**076 841 5357**

(cs61748) N

# இனப்படுகொலைகளின் சாட்சியாக செம்மணியில் மீட்கப்படும் என்புகள்

சிறீநாத் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 27

யாழ். செம்மணியில் தொடர்ச்சியாக மீட்கப்படும் எலும்புக்கூடுகள் தமிழ் மக்களுக்கு எதிராக காலம் காலமாக நேர்ந்த அநீதிகளையும் இனப்படுகொலைகளையும் உறுதிப்படுத்துவதற்கான ஆவணமாகியுள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம் உறுதியாக முடிவெடுத்து தனது நடுநிலையையும், நீதித் தன்மையும் வெளிப்படுத்தவேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறீநாத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணியில் 400க்கும் மேற்பட்ட எலும்புகூடுகள் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆதாரங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

இதனை மேலும் வலுவுள்ளதாக மாற்றுவதற்கும் பல்வேறு பகுதிகளில் புதைக்கப்பட்ட மனித உடலங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளை துரித கதியில் உரிய காலத்தில் எடுக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக காலம் காலமாக செய்யப்பட்ட அநீதிகளை வெளிக்கொண்டு வருவதற்காகவும், தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலையை உறுதிப்படுத்துவதற்காக இந்த விடயங்களை ஆவணங்களாக கொண்டுசெல்லும் பொறுப்பு உள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம் உறுதியாக முடிவெடுத்து தனது நடுநிலைத்தன்மையையும் நீதித் தன்மையும் வெளிப்படுத்தவேண்டும் - என்றார். (ச-இ)


# பகிரங்க அறிவித்தல்

## யாழ். உடுவில் ஸ்ரீ சிவஞான பிள்ளையார் ஆலயம்

உடுவில் ஸ்ரீ சிவஞான பிள்ளையார் ஆலய முன்றலில் 05.03.2026 அன்று பிரதேச செயலக அலுவலர்களின் முன்னிலையில் மேற்படி ஆலயத் திறப்பானது கோ. பாலமுரளிதர சர்மா அவர்களால் எடுக்கப்பட்டு. பிரதேச செயலக அலுவலர்களினால் அவருக்கு மேற்படி ஆலயத்தில் பூசைகள் செய்வதற்கு மாத்திரம் அனுமதியளித்து. பூசை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

இது தவிர, ஆலயத்தின் நிர்வாக, நிதி மற்றும் இணையவழி (Digital / Online) நடவடிக்கைகளுக்கு வேறு யாரும் உரித்துடையவர்கள் அல்லர். பூசை நடவடிக்கைகள் தவிர்ந்த இதர நிர்வாக அல்லது இணையவழி நடவடிக்கைகளில் யாரேனும் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்ஙனம்

ஆதீனம் சிவஸ்ரீ வெங்கட சுப்பிரமணியக் குருக்கள்

(CS61757 (n-1)



## வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## இல - 44, குட்செட் வீதி, வவுனியா

### அறிவித்தல்

## பகிரங்க ஏல விற்பனை

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான கீழ்குறிப்பிடப்படும் ஏழு மோட்டார் சைக்கிள்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

| இல | பதிவிலக்கம் | வகை | ஏல விற்பனைக்கான ஆரம்பப்பெறுமதி Forced Sale Value |
|---|---|---|---|
| 1 | NP-BAN-6761 | TVS XL Super Heavy Duty | 60,000.00 |
| 2 | NP BFH - 1544 | Honda CB 125 Shine | 300,000.00 |
| 3 | NP-BFH-1599 | Honda CB 125 Shine | 250,000.00 |
| 4 | NP-BHX-2130 | Honda CB 125 Shine | 290,000.00 |
| 5 | NP-BFK-2115 | Honda CB 125 Shine | 240,000.00 |
| 6 | NP-BFP-0856 | Honda CB 125 Shine | 250,000.00 |
| 7 | NP-BFP-0819 | Honda CB 125 Shine | 275,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் 11.07.2026 ந் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள சமாச அலுவலக மண்டபத்தில் சமாச நிதி. நிர்வாக உபகுழுவின் முன்னிலையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். கூடுதலான கேள்வித்தொகையை கேட்கும் நபருக்கு மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யப்படும் என்பதுடன் சமாச நிதி. நிர்வாக உபகுழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

இப் பகிரங்க ஏலவிற்பனையில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் மீளளிக்க முடியாத நுழைவுக் கட்டணமாக ரூபா ஐந்நூறு (500.00) தொகையை கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் ஏலவிற்பனை திகதிக்கு முன்பாக செலுத்தி பற்றுச்சிட்டையை பெற்றுக்கொள்ள வேண்டும். ரூபா 500.00 தொகையை செலுத்தி பற்றுச்சிட்டையை பெற்றுக் கொண்டவர்கள் மட்டும் பற்றுச்சிட்டையுடன் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ள முடியும்.

மேற்கூறிய மோட்டார் சைக்கிள்களை கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் அமைந்துள்ள சமாச அலுவலகத்தில் 09.07.2026ந் திகதி தொடக்கம் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் மற்றும் பகிரங்க ஏலத்தில் விடப்படும் தினம் காலை 9.30 மணி வரையும் பார்வையிடலாம்.

மோட்டார் சைக்கிளின் கேள்வித் தொகையின் பெறுமதியை அன்றைய தினமே முழுமையாக செலுத்தி மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது கேள்வித் தொகையின் பெறுமதியின் அரைப்பங்கிற்கு (50%) குறையாத தொகையினை அன்றைய தினம் செலுத்தி மிகுதித் தொகையை ஏல விற்பனைக்கு விடப்படும் தினத்தில் இருந்து ஆகக்குறைந்தது மூன்று (03) நாட்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டும். முழுத்தொகையையும் செலுத்தி முடித்த பின்பே மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ளலாம்.

கூடுதலான கேள்வித் தொகையில் மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ளும் நபர் அன்றைய தினம் மோட்டார் சைக்கிளின் பெறுமதியில் அரைப்பங்கிற்கு குறையாத தொகையை செலுத்திய பின்பு மூன்று நாட்களுக்குள் மீதித்தொகையை செலுத்தி மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் செலுத்திய தொகை உரிய நபருக்கு மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் அடுத்த கேள்வித் தொகையில் உள்ள நபருக்கு மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யப்படும்.

மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொண்ட நபர் அதன் பின்பு மோட்டார் சைக்கிள் தொடர்பாக அவரினால் தெரிவிக்கப்படும் எவ்விதமான குறை நிறைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொண்ட நபருக்கு மோட்டார் சைக்கிளின் பதிவுச்சான்றிதழ். வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் ஆகியவற்றின் மூலப்பிரதிகளுடன் உரிமை மாற்றம் தொடர்பான படிவமும் ஒப்பமிடப்பட்டு வழங்கப்படும்.

**திரு.சு.புவனேந்திரராசா JP**

**தலைவர்,**


**வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.**

**இல. 44, பொதி மண்டப வீதி. (Goods shed Road) வவுனியா.**

**T.P 024-222 2636, 024-222 2341**

திகதி 27.06.2026

(cs61751) N

கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் ஐந்தாம் நாள் உற்சவத்தில் விநாயகப் பெருமான் அழகிய முத்துச்சப்பறத்தில் வீதிவலம் வந்தார். (ச-17)


# கேள்வி அறிவித்தல்

## பல நாட் படகு விற்பனை செய்தல்

எமது சங்கத்திற்கு சொந்தமானதும் தற்போது பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதுமான பல நாட் படகினை மூடிய கேள்வி கோரல் முறை மூலம் விற்பனை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலும் இப்படகு தொடர்பான முழு விபரங்களையும் அறிவதற்கும் அதனைத்தொடர்ந்து பார்வையிடுவதற்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

விண்ணப்பமுடிவு திகதி : 10.07.2026 (மதியம் 12 மணி)


தலைவர் **T.P: 077 061 4896, 077 076 2049**

வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம்

(cs61092) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 12 . 1944

மறைவு 01 . 07 . 2023

## அமரர் இராசதுரை அருளானந்தம்

**திதி: ஆனி வளர்பிறை திரியோதசி**

அப்பா மூன்றாண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள்
மட்டும் எங்கள் இதயங்களில் என்றும் வாழ்கின்றன
அப்பா நீங்கள் எம்முடன் இல்லாவிட்டாலும்
உங்கள் அன்பும் ஆசீர்வாதமும் என்றும்
எம்மை வழிநடத்துகின்றன
அப்பா அன்பு, பண்பு, பாசம் நிறைந்த உங்கள்
இனிய வாழ்வு என்றும் எங்கள் உள்ளங்களில்
ஒளிரும் அழியாத தீபம்
அப்பா காலம் கடந்து சென்றாலும் கண்ணீர்
துளிகள் குறையவில்லை உங்கள் இனிய
நினைவுகள் மட்டும் என்றும் எம்மை விட்டு நீங்கவில்லை
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

"அன்னை இல்லம்"
பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.
021 205 3017

தங்கள் பிரிவால் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS/61762) J-1



## ஸ்கந்தபுரத்தில் மீண்டும் கரும்புச்செய்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

பல தசாப்தங்களுக்குப் பின்னர் ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டத்தில், மீண்டும் கரும்புச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் செய்கையை ஆரம்பித்துவைத்தார். தெரிவு செய்யப்பட்ட 20 விவசாயிகள், 20 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்புச்செய்கையில் ஈடுபடவுள்ளனர். இங்கு அறுவடையாகும் கரும்பை Natural Roots நிறுவனம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலர், கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாய ஆராய்ச்சி மேலதிக பணிப்பாளர் ,மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர், கிளிநொச்சி மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், Natural Roots நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர். (க-113)

## ஈரநிலங்களினூடான பயண வழிக்கற்றல்

யாழ்ப்பாணம்,ஜூன் 27

சிறுவர்களுக்கான ஈரநிலங்களினூடான பயண வழிக்கற்றல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வல்லையில் இடம்பெறும். இயற்கையை அறிந்த குழந்தைகள் நாளைய பூமியைப் பாதுகாப்பார்கள் எனும் தலைப்பில் இடம்பெறும் நிகழ்வில் பங்கேற்போர் இயற்கையுடன் ஒத்தநிறங்களினூடானஆடைகள் அணியவேண்டும். பங்குபற்றுபவர்கள் 0779476901 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (க)

# மரண அறிவித்தல்



தோற்றம் 01.10.1937

மறைவு 25.06.2026

## ஆறுமுகம் சின்னம்மா

சண்டிலிப்பாய் ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்துவந்தவருமாகிய ஆறுமுகம் சின்னம்மா அவர்கள் நேற்று முன்தினம் (25.06.2026) வியாழக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், ஓய்வுபெற்ற முன்னாள் இலங்கைப் பொலிஸ் உத்தியோகஸ்தர் செல்லப்பா ஆறுமுகம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, சரஸ்வதி (இங்கிலாந்து), தவமலர் மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சற்குணலிங்கம் (லிங்கம்), சுதேசா (சாந்தி - சண்டிலிப்பாய்), சற்குணராஜா, (திரு) மற்றும் சுதேஸ்குமார் (சுதேஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌரி, அருணகிரிநாதன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்பாசன திணைக்களம்), சாந்தி, நித்தியகலா ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜதுரஞ்சன் (அசிரியர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை), நமணா (ஆசிரியை, மா/சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), சசிதரன் (Marine Officer, மன்னார்), ஷோபனா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா), வினோத் - சஹானா, நணுஜா - சுலக்ஷன், திஷாந், ஆஷாந், மகிஷா, வினித், நிவிஷா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், ஷப்தகி, ஆயுஷ்மன், ஆதிரன், தணிகை, யாழன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.06.2026 திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும்.

**தகவல்:**

லிங்கம் (மகன்) 416 742 0187
திரு (மகன்) 647 707 4865
சுதேஸ் (மகன்) 647 286 1630
கஜன் (பேரன்) 077 422 3154
சசிதரன் (பேரன்) 077 611 0128

(CS/61753) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைகுலைந்தது வெனிசுவேலா!



## அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் பெரும் உயிரிழப்பு அச்சம்



**கராகஸ், ஜூன் 27**
**இலத்தீன் அமெரிக்க நாடான வெனிசுவேலாவில் 39 விநாடிகள் இடைவெளியில் ஏற்பட்ட அடுத்தடுத்த இரட்டை நிலநடுக்கங்களால் தலைநகர் கராகாஸ் உள்ளிட்ட முக்கியமான நகரங்கள் நிலைகுலைந்துள்ளன.**

வியாழக்கிழமை மாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கங்கள் ரிக்டர் அளவுகோலில் 7.2 மற்றும் 7.5 ஆகப் பதிவாகியுள்ளன. இந்த அதிர்வுகளால் கரீபியன் தீவுப் பகுதிகளில் விடுக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கை பின்னர் வாபஸ் பெறப்பட்டது. அதிகாரபூர்வ உயிரிழப்பு விவரங்கள் இன்னும் வெளியிடப்படாத நிலையில், இப்பேரிடரால் 10,000 முதல் 1 இலட்சம் வரை உயிரிழப்புகள் நேரிட்டிருக்கலாம் என அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் மதிப்பிட்டுள்ளது.

தலைநகர் கராகஸில் அடுக்குமாடி குடியிருப்புகளும் வணிக வளாகங்களும் சரிந்து விழுந்துள்ளதால், ஒட்டுமொத்த நகரமும் தூசு மண்டலமாக மாறியுள்ளது. இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலநடுக்கத்தால் சைமன் பொலிவர் சர்வதேச விமானநிலையம் பலத்த சேதமடைந்து தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன், லா குவைராவின் கடலோர உள்கட்டமைப்புகள் தரைமட்டமாகியுள்ளன. தொடர்ந்து 20க்கும் மேற்பட்ட நில அதிர்வுகள் ஏற்பட்டதால் மக்கள் வீதிகளிலேயே தஞ்சமடைந்துள்ளனர். நாட்டின் தற்போதைய பேரழிவு நிலையைக் கருத்திற்கொண்டு, வெனிசுவேலாவின் இடைக்கால ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ் நாடு முழுவதும் அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார். (எ-இ)


## நட்பு நாடுகளால் ட்ரம்ப் ஏமாற்றம்

வொஷிங்டன், ஜூன் 27
ஈரானுக்கு எதிரான போரின் போது பல நேட்டோ நட்பு நாடுகள் ஆதரவளிக்கத் தவறியதால் தான் ஏமாற்றமடைந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நேட்டோ பொதுச்செயலாளர் மார்க் ரூட்டே உடனான சந்திப்பின் போது, "நட்பு நாடுகள் அனைத்தும் இலவசமாகக் கிடைக்க வேண்டும் என நினைக்கின்றன, பணம் செலுத்த விரும்புவதில்லை" என அவர் சாடினார்.

முதல் வாரத்திலேயே அமெரிக்கா ஈரானை அழித்துவிட்டதாகவும், உலகின் சக்திவாய்ந்த இராணுவம் தங்களிடம் உள்ளதால் யாருடைய உதவியும் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், ட்ரம்பின் இக்குற்றச்சாட்டை நேட்டோ பொதுச்செயலாளர் மார்க் ரூட்டே நிராகரித்தார். ஈரான் அணுசக்தி திறன் செயலிழக்கச் செய்யப்பட்டதை ஜி7 தலைவர்கள் பாராட்டியதைச் சுட்டிக்காட்டிய அவர், இப்போரின் 6 வாரங்களில் ஐரோப்பிய தளங்களிலிருந்து சுமார் 4,000 முதல் 5,000 அமெரிக்க விமானங்கள் புறப்பட்டுச் சென்றதை ஆதாரமாக முன்வைத்தார். (எ-இ)



## அரசுப் பேருந்தில் பயணித்த விஜய்

சென்னை, ஜூன் 27
தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் சார்பில் சென்னை, கோவை உட்பட 6 கோட்டங்களுக்காக 300 புதிய அரசுப் பேருந்துகளின் சேவைகளைத் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து பெரம்பூர் செல்லும் '29 ஏ' தடம் எண் கொண்ட சாதாரண அரசுப் பேருந்தில் முதல்வர் திடீரென ஏறிப் பயணம் மேற்கொண்டார். பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்த அவர், நடத்துநரிடம் டிக்கெட் எடுத்துப் பயணித்தார்.


ஓட்டுநரின் அருகே உள்ள முன்புற இருக்கையில் அமர்ந்தபடி, சாலையில் திரண்டிருந்த மக்களைத் தனது கைத்தொலைபேசி மூலம் அவரே வீடியோவாகப் பதிவு செய்தார். தலைமைச் செயலகத்தில் இருந்து கலங்கரை விளக்கம் வரை பேருந்தில் பயணித்த முதல்வர் விஜய், பின்னர் அதே பேருந்திலேயே மீண்டும் தலைமைச் செயலகம் திரும்பினார். (எ-இ)

## பிரான்ஸை வாட்டுகிறது வெப்ப அலைத் தாக்கம்!

### 20 பேர் உயிரிழப்பு

பாரிஸ், ஜூன் 27
ஐரோப்பிய நாடுகளில் கடந்த சில நாள்களாக நிலவி வரும் அதீத வெப்ப அலையால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். குறிப்பாகப் பிரான்ஸ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் வரலாறு காணாத வகையில் 40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இந்தக் கடுமையான வெப்பத்தின் தாக்கத்தினால் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, வெப்பத்தைத் தணிப்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள நீர்நிலைகளில் தஞ்சமடைந்த மக்களில், கடந்த 18ஆம் திகதி முதல் இதுவரை 40 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். தற்போது நாம் ஒரு அசாதாரண காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளோம் எனவும், 1947ஆம் ஆண்டிற்குப் பின்னர் பதிவான அதிகபட்ச வெப்பநிலை இதுவெனவும் தெரிவித்துள்ள அதிகாரிகள், நாட்டின் பல்வேறு நகரங்களுக்கு அவசரகால எச்சரிக்கையையும் விடுத்துள்ளனர். (எ-இ)



## ட்ரம்பின் அதிரடிக்கு நீதிமன்று முட்டுக்கட்டை

சான் பிரான்சிஸ்கோ, ஜூன் 27
அமெரிக்காவில் குடியேற்ற நீதிமன்றத்துக்கு விசாரணைக்காகச் செல்லும் வெளிநாட்டினரை, நீதிமன்ற வளாகத்திலேயே வைத்து அதிரடியாகக் கைது செய்து சிறையிலடைக்கும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத்தின் நடைமுறைக்கு சான் பிரான்சிஸ்கோ நீதிமன்ற நீதிபதி அதிரடியாகத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

ட்ரம்ப் அரசாங்கத்தின் இந்த சர்ச்சைக்குரிய கைது நடைமுறையை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சான் பிரான்சிஸ்கோ நீதிமன்ற நீதிபதி கேசிபிட்ஸ் இந்த இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன், முறையான திட்டமிடல்கள் ஏதுவுமின்றி அரசாங்கம் தன்னிச்சையாக முன்னெடுக்கும் இத்தகைய கைது நடவடிக்கைகளுக்கு நீதிபதி தனது கடுமையான கண்டனத்தையும் இதன்போது வெளியிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### எங்கள்...

விடுவிக்குமாறு வலியுறுத்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே பத்தாவது வாரமாக நேற்றும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (அ-ம-26

### செம்மணிக்கு...

கடந்த வருடம் ஜூன் மாதம் நடைபெற்ற அணையா விளக்குப் போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளையும் மீண்டும் வலியுறுத்தும் நோக்குடன் இந்தப் போராட்டம் அமையவுள்ளதாக மக்கள் செயல் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மக்கள் செயல் அமைப்பினர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

செம்மணியில் மீட்கப்பட்ட மனித என்புத் தொகுதிகள் தொல்பொருள் கண்டுபிடிப்புக்கள் அல்ல. அவை இன்னும் உண்மையைத்தேடிக் காத்திருக்கும் குடும்பங்களின் சாட்சிகளாகவும், நீதியை எதிர்நோக்கும் மக்களின் வரலாற்று நினைவுச் சின்னங்களாக வும் உள்ளன. இந்தப் பின்னணியில் எமது கோரிக்கைகள் பின்வருமாறு மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன.

✦ செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அனைத்து விசாரணையும் சர்வதேசக் கண்காணிப்புடன், சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.


✦ மனிதப் புதைகுழி அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்படும் அனைத்து என்புத் தொகுதிகளும், சான்றுகளும் சர்வதேச நடைமுறைகளுக்கு ஏற்ப பாதுகாக்கப்பட்டு அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

✦ காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் உண்மையை அறியும் உரிமை முழுமையாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

✦ மனிதப் புதைகுழிகள் தொடர்பான உண்மையை வெளிக்கொணரச் சுயாதீனமான சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதுவரை கண்டறியப்பட்ட மற்றும் இனிமேல் அடையாளம் காணப்படும் அனைத்து மனிதப் புதைகுழிகளும் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

✦ உரிமைப்பந்தப் போராட்ட நிகழ்வு பழிவாங்கலுக்கானதோ அல்லது வெறுப்பைத் தூண்டுவதற்கானதோ அல்ல. மாறாக, உண்மை, நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித மாண்பின் உரிமையை வலியுறுத்தும் அமைதிவழி மக்கள் போராட்டமாகும். எனவே, மனித உரிமைகள், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை மதிக்கும் அனைத்து மக்களும், சிவில் சமூக அமைப்புக்களும், மதத் தலைவர்களும், மாணவர்களும், அரசியல் கட்சிகளும் இளைஞர்களும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் கலந்து கொண்டு தமது ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-66)



# மருதமடு அன்னைக்கு கொடியேற்றம்



மன்னார், ஜூன் 27

மன்னார் மருதமடு அன்னையின் ஆடி மாதத் திருவிழாவுக்கான கொடியேற்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மருதமடு திருத்தல பரிபாலகர் அருட்பணி பெப்பி.சோசை அடிகளார், மற்றும் மடுத் திருத்தலத்தின் நிர்வாக ஒழுங்கமைப்பில் சிறப்பாக நடைபெற்றது.

மடு அன்னையின் திருத்தலத்தின் போட்டிக்கோ முன்றலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள், இறைமக்கள் அடங்கலாக இறைவழிபாட்டோடு முதலாவது நவநாள் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.


முதலாவது நவநாள் வழிபாட்டின் ஆரம்ப நிகழ்வாக மருத மடுத் தாயாரின் கொடி மற்றும் பாப்பரசரின் திருக்கொடிகள் மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆண்டகையால் இறைவார்த்தைப் பகிர்வோடு ஆசீர்வதிக்கப்பட்டு ஏற்றிவைக்கப்பட்டன.

மன்னார் மடுமாதா திருத்தலத்தின் ஆடி மாதத் திருவிழா ஆண்டுதோறும் ஜூன் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஜூலை 2ஆம் திகதி காலை 6:15 மணிக்கு திருவிழாத் திருப்பலியுடன் பக்திபூர்வமாக நிறைவடை கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-56,213,60)

# விவாதம் கோரி பிரேரணை

உயர் நீதிமன்றத்தில் எட்டுக்கும் மேற்பட்ட நீதிபதி வெற்றிடங்கள் ஆறு மாதங்களுக்கும் மேலாக நிரப்பப்படாமல் இருப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் நடத்தக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றுப் பிரேரணை ஒன்றில் கையொப்பமிட்டனர். சட்டத்தின் ஆட்சி, மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் நீதியைப் பெறும் உரிமை ஆகியவற்றில் ஏற்படும் தாக்கத்தை கருத்தில் கொண்டு, நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 83(1) இன் கீழ் விவாதம் நடத்த அனுமதி கோரி இந்தப் பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (எ-இ)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 . 11 . 1954 | 26 . 06 . 2026 |

### சிவசம்பு சோதிரெட்னம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் அமெரிக்கா நியூயோர்க் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சோதிரெட்ணம் நேற்று (26.06.2026) வெள்ளிக்கிழமை நியூயோர்கில் உள்ள Staten Island என்னும் இடத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சின்னத்தங்கத்தின் அன்பு மகனும், சரஸ்வதி - இராஜரட்ணம், யோகரட்ணம் காலஞ்சென்ற குணரட்ணம், கணேசரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரமலர் (யோகம் - USA) அன்புக் கணவரும், சுகன்ஜா (France), சரண்யா (USA), சஞ்சீவன் (USA), காலஞ்சென்ற பிரசன்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜேந்திரம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அக்ஷயா (France), அஜித் (France), ஆர்த்திகன் (France), சமைரா (USA), நோர்மன் (USA) ஆகியோரின் அன்புப் பேரனும், தயாளன், மொரலாஸ் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான அருள் நந்தி நாதன் (பிரபு), சுகுணேஸ்வரமலர் (சுகுணா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று நடாத்துவதற்கான ஏற்பாடுகள் அவரது குடும்பத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
யோகம் (மனைவி) - 001 347 998 2423 (அமெரிக்கா)
சுகன்ஜா (மகள்) - 0033 671 265940 (பிரான்ஸ்)

CS 32058A

### பிரபல ஈழத்து எழுத்தாளர்

# செங்கை ஆழியானின் மகள் ரேணுகா நேற்றுக் காலமானார்!



யாழ்ப்பாணம், ஜூன் 27

பிரபல ஈழத்து தமிழ் எழுத்தாளர் சாகித்ய ரத்னா செங்கை ஆழியானின் மகளான சித்த மருத்துவரும், கவிஞருமான ரேணுகா பிரதீப்குமார் நேற்று வெள்ளிக்கிழமை உடல்நலக் குறைவு காரணமாக காலமானார்.

சிறந்த மரபுக் கவிஞரான இவர் யாழ்ப்பாணத்தில் பல ஆண்டுகள் சித்த மருத்துவராகவும் பணியாற்றியுள்ளார். 'உங்கள் தேகா' எனும் புனைபெயரில் கவிதைகள் எழுதிவந்த இவர் அர்ப்பணா, காத்திருக்கும் வண்ணமயில் ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## சட்டவிரோத...

னர் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகளுக்கு மருதங்கேணி பொலிஸார் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே, நேற்றுமுன்தினம் கடற்படையினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 8 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டனர் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர்களுக்குஎதிராகச்சுமத்தப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர்களுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது.

(அ-ம-66)

## தேரர்கள்...

வனை, ஒப்படைத்த நாளில் இருந்து குறித்த சிறுவனைத் தகாத நடவடிக்கைக்கு உட்படுத்தி ஸ்ரீ சம்புத்த வாலுகாராம விகாராதிபதிக்கு 30 ஆண்டுகள் கடுழியச் சிறையும், ஸ்ரீ சீவலி சைத்தியாராம விகாராதிபதிக்கு 24 ஆண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனையும், தனது சகோதரியான 7 வயதுடைய சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு 15 ஆண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனையும், 15 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றவாளிக்கு 32 ஆண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனை யும் அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது.

(அ-ம)

## ஹெரோய்னுடன்...

சுற்றிவளைப்பிலேயே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 80 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ-ம-23)

## ஆளுநருக்கு...

அதைத் தூக்கிவீசிய குற்றத்துக்காக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா. கிஷோரின் பதவி வடமாகாண ஆளுநர் வேதநாயகனால் அண்மையில் பறிக்கப்பட்டிருந்தது. ஆளுநரின் இந்தச் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்தே, சாவகச்சேரியில் நேற்று கடையடைப்பும், கவனவீர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

'திசைகாட்டி அரசாங்கத்தின் விருப்பத்துக்கு அமைய செயற்படும் போக்கை ஆளுநர் கைவிட வேண்டும். தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக, மக்களின் ஜனநாயக முடிவுகளை அவமதிக்கும் வகையில் ஆளுநர் செயற்படக்கூடாது. எனவே, ஆளுநர் தனது முடிவைத் திரும்பப் பெற வேண்டும்' என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(அ-ம-26-9)

## மீன்பிடிக்குச்...

கல்விளான் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கண்ணையா அன்பரசன் (வயது-26) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் தூண்டில்மூலம் மீன்பிடிப்பதற்காகச் சென்ற இளைஞர் நீண்ட நேரமாக வீடுதிரும்பியிருக்கவில்லை. இதையடுத்து, நேற்றுக்காலை அவருடைய தந்தை அவரைத் தேடிச் சென்ற நிலையில் தனது மகன் சடலமாக குளத்தில் மிதப்பதை அவதானித்துள்ளார். இதையடுத்து, பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டு பொதுமக்களின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டது. மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-55-35)

## கடந்த...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டாம் உலகப்போரின்போது ஹிட்லருக்கு என விசேட இராணுவப் பிரிவு இருந்தது. அதுபோன்றே எமது நாட்டின் கடந்தகால ஆட்சியாளர்கள் செயற்பட்டனர். சட்டவிரோத இராணுவக் குழுக்கள் அவர்களின் கீழ் இயங்கின. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அரசியற் பழிவாங்கலில் ஈடுபடுவதாக எதிரணிகள் குற்றஞ்சாட்டுகின்றன. சுரேஷ் சாலே விடயத்தில் பழிவாங்கல் நடப்பதாகவும் கூறப்படுகின்றது. பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய எந்தத் தேவையும் எமக்கு இல்லை. அனைத்து நடவடிக்கைகளும் சட்டபூர்வமாகவே இடம்பெற்று வருகின்றன. தான் குற்றவாளி இல்லை என்றால், அதை நிரூபித்து விடுதலையாகுவதற்கு சுரேஷ் சாலேவுக்கு எந்தத் தடையும் இல்லை - என்றார்.

(அ-ம)

## பெருமளவு...

பயணித்த காரொன்றை இடைமறித்துச் சோதனையிட்ட வேளையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட மூவரைவிட மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்களைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபர்களிடம் தற்போது மேலதிக விசாரணை இடம்பெற்று வருகின்றது. முழுமையான விசாரணைக்குப் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார்முன்னெடுத்து வருகின்றனர்.

(அ-ம-110)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்குப் பகுதியில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- பலாலி பிரதான வீதியில் இருந்து 150m தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ஒரு பரப்பின் விலை 55 லட்சம் ரூபாய்

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

(CS/32056) J-1

தொடர்புகளுக்கு :- 077 814 7389
077 986 5457

ஜெயம்
jeyam.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை செயலிழக்கச் செய்கின்றது மத்திய அரசு!

## தவிசாளர் நிரோஷ் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

**உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் ஒவ்வொன்றாக மத்திய அரசாங்கத்தின் அதிகாரசபைகள் ஊடாக பறிக்கப்படுகின்றன. மத்திய அதிகாரசபைகளுக்கு அதிக சட்ட அதிகாரங்களைக் கையளிப்பதன் வாயிலாக மாகாண நிரலுக்கள் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது அரசாங்கத்தினால் சுற்றுச்சூழல் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனூடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச அதிகாரங்களும் மீள மத்திக்கு எடுக்கப்படுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்தின் 9ஆவது அட்டவணையில் நிரலில் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி விடயங்கள் ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் புறம்பாகப் பறிக்கப்படுகின்றன. கொண்டுவரப்படும் சட்டத்தின் பிரகாரம், சுற்றாடல் விடயத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யமுடியும் எனக் கூறப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களில் திண்மக்கழிவு முகாமைத்துவத்துக்கான ஆளணியை நிரப்புவதற்கு அரசாங்கம் அனுமதிக்கவில்லை. கழிவகற்றும் வாகனங்களுக்கான அனுமதிகள் கிடப்பிலுள்ளன. சில நியமத்துணை விதிகளை நாம் உருவாக்குவதற்கு மாகாணசபையின்றி தடைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் முந்திக்கொண்டு அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைப் பறிப்பது மட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களைச் செயலிழக்கச் செய்யும்வகையில் நீதிமன்றங்களில் நிறுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றது. எமது அதிகாரங்கள் ராஜபக்சக்களின் காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, கடலோரபாதுகாப்பு அதிகாரசபைகள் ஊடாக பறிக்கப்பட்டது. தற்போது சுற்றாடல் அதிகாரசபை ஊடாகப் பறிக்கப்படுகின்றது - என்றார். (ச)

# அமைச்சர் நளிந்த இன்று யாழ். போதனா வருகை



யாழ்ப்பாணம், ஜூன் 27

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வருகை தரவுள்ளார்.

இன்று காலை 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வருகைதரும் அவர் நண்பகல் 1.30 மணிவரை பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுக்கவுள்ளார். (ம-26)

**வாடகைக்குத் தேவை**

நிறுவனம் ஒன்றிற்கு Mahindra Bolero வாகனம் மாதாந்த வாடகைக்குத் தேவை.

077 2919 079

# 11 இலட்சத்தை தாண்டியது சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, ஜூன் 27

ஜனவரி மாதம் முதல் கடந்த 21ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 11 இலட்சத்தைக் கடந்துள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதன்படி, மொத்தம் 1,104,354 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதோடு, ஜூன் முதலாம் திகதி முதல் 21ஆம் திகதிவரை மட்டும் 82,332 பேர் வந்துள்ளனர். இவ்வருடம் இதுவரை அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தே வந்துள்ளனர். இரண்டாம் இடத்தில் ஐக்கிய இராச்சியமும், மூன்றாம் இடத்தில் சீனாவும் உள்ளன. மேலும், மாதாந்திர அளவில் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த மாதமாக பெப்ரவரி மாதம் பதிவாகியுள்ளது. (எ-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயப் பராபவ வருட மஹோற்சவத்தின் கைலாச வாகனத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-41-66)

# பிரதோச உற்சவம்

வரலாற்றுச்சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை சனிப்பிரதோச விரத உற்சவம் இடம்பெறும். இன்று மாலை 4 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து, சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறும், வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நகுலேஸ்வரப் பெருமான் பிரதோச மூர்த்தியாக அதிகார நந்தி வாகனத்தில் உள் வீதி எழுந்தருள்வார். (க-66)



# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 07 . 1954



மறைவு 18 . 06 . 2026

## குழந்தை யோகராஜா

**(முன்னாள் இ.போ.ச வட பிராந்திய திடீர் சாலை பரிசோதகர்)**

வசாவிளன் கோணாவளையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு நாவற்காடு கல்வியோரத்தை வசிப்பிடமாகவும், தற்போது ஜேர்மனி Herbolzheim ல் வசித்தவருமான யோகராஜா குழந்தை அவர்கள் கடந்த 18.06.2026 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் ஸ்தாபகர் அருளாளர் சீனியர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் பேரனும், காலஞ்சென்றவர்களான குழந்தை - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் ஆலய தர்மகர்த்தா காலஞ்சென்ற சிவகுருஐயர் - சோதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், அனுஷா, மகேந்திரராஜா, கோகிலவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவா, சிவசோதி, சிவதீபம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவதுரை, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் தர்மகார்த்தா காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஐயர் மற்றும் செல்வரத்தினம், பாலசுப்பிரமணியம் ஐயர், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவமலர், சிவசோதி, சிவயோகம், சிவதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேஸ்குமார், சசிகுமார் ஆகியோரின் சிறிய தந்தையும், மதனராஜ், மதுசனா ஆகியோரின் பெரிய தந்தையும், தீபா, அருண், சீதா, அர்ஜீன், அவினேஸ், சிவகுரு, சிவகீர்த்தன், சிந்துஜன், சுர்திகா, சிவருதன், சிவஸ்னவி, சிவமித்ரன், சிவமிதுர்சன், சியாந்தகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை Bestattungsunternehmen Zahringer எனும் முகவரியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**“சிவபுரம்”**
**அச்சுவேலி தெற்கு,**
**நாவற்காடு, கல்வியோரம்.**

(cs61760 (N-1))

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.